உ

சிவமயம்

# அமரர்

# திருமதி இராசம்மா மாணிக்கம்

அவர்களின்



# நினைவு மலர்

09-10-2018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ

அமரர்

# திருமதி இராசம்மா மாணிக்கம்



அன்னை மடியில்
27-08-1927

இறைவன் அடியில்
09-09-2018

## திதி வெண்பா

சீர்மிகு அராலியூர் திருமதி இராசம்மா மாணிக்கம்
பார்புகழ் வாழ்வு வாழ்ந்து சொந்தபந்தம் விட்டு அம்மனடி
சேர்ந்த நாள் விளம்பி வருடம் ஆவணித்திங்கள்
ஈர்பத்து நான்காம் நாள் வளர்பிறை பிரதமை என்றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அன்பு அம்மாவிற்கு சமர்ப்பணம்!

அன்பின் உறைவிடமாய் குடும்பத்தின் குலவிளக்காய் பண்பின் பொக்கிஷமாய் சகலருக்கும் அம்மாவாக இருந்து எங்கள் வளர்ச்சிக்கு முன்நின்று வழிகாட்டியதுடன் அன்பு, அடக்கம், ஒழுக்கம், சைவ சமய பண்புகள் யாவற்றையும் போதித்து அதன்படி வாழ்ந்து காட்டிய உத்தமியே! நாங்கள் சோர்ந்து துவண்ட நிலையில் எங்களை உற்சாகப்படுத்தி ஆறுதல் வார்த்தைகள் கூறி அரவணைக்கும் அம்மாவே!

மருமக்களையும் தன் மக்கள்போல அணைத்து பல புத்திமதிகளை கூறி அன்பு காட்டிய மாமியே! பேரப்பிள்ளைகளை. பூட்டப்பிள்ளைகளையும் கண்ணை இமை காப்பது போல பாதுகாத்து, வளர்த்து, உரிய நேரத்தில் அவர்களுக்கு பிடித்த வகையில் உணவு சமைத்து ஊட்டுவதுடன் அவர்களின் வளர்ச்சிகளை கண்டு அவர்களை பாராட்டி,
அக மகிழ்ந்து, அவர்களை கட்டி அணைத்து முத்தமிடும் உத்தமியே
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருடனும் அன்புடன் உறவாடி மகிழும் உத்தமியே!
என்றென்றும் எங்கள் உயிர் மூச்சு உள்ளவரை உங்களை வணங்கி இம்மலரை உங்கள் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

அருமை மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

ஒளவையார் அருளிய

## விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்

தெவிட்டா ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தி

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள் வழிகாட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோக சுவாமிகள் அருளிய

## நமச்சிவாயப் பத்து

அடியவர் மனத்தை நீங்கா அப்பனே கருணை வாழ்வே
வடிவுடை மழுமானேந்தும் வள்ளலே நமச்சிவாய. 1

ஆக்கையே கோயிலாக வகஞ்சிவ லிங்கமாக
நீக்கமற் றெங்கும்நிற்கும் நிமலனே நமச்சிவாய. 2

இணையடி பணிவார்தம்மை யின்பவீ டடையச்செய்யுந்
துணைவனே சோதிவெற்பே தூயனே நமச்சிவாய. 3

ஈசனே யெம்மைநீங்கா இறைவனே யிமையோர் போற்றும்
வாசமார் கமலபாதா வள்ளலே நமச்சிவாய. 4

உள்குவா ருள்ளத்தெல்லாம் உடனிருந் தறியுந்தேவே
கள்ளுலாங் குழலாள்பாகா கடவுளே நமச்சிவாய. 5

ஊமைபோ லிருந்தேயுண்மை யுணருவார் தங்கட் கெல்லாம்
தாய்மைபோ லருளைச்செய்யுஞ் சங்கரா நமச்சிவாய. 6

எண்ணுவா ரெண்ணந்தோன்று மிடமெனப் பெரியோருன்னைத்
திண்ணமாய்ச் சொல்லும்நல்ல தெய்வமே நமச்சிவாய. 7

ஏகம்ப மேவியந்த ஏந்திழை கலக்கந்தீர்த்த
ஏகனே யெல்லாம்வல்ல எந்தையே நமச்சிவாய. 8

ஐயந்தீர்த் தடியேன்றன்னை யன்றுநல் லூரிலாண்ட
துய்யனே துரியவெற்பே சுந்தரா நமச்சிவாய. 9

ஒன்பது வாய்த் தோற்பைதன்னில் உயிரடங்கி நிற்கநல்ல
அன்புசெய் தெய்வமேயென் அமுதமே நமச்சிவாய. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிருதிருமுறை

## முதலாம் திருமுறை தேவாரம் - திருஞானசம்பந்தர்

திருவலிவலம்:திருவிராகம் பண்: வியாழக்குறிஞ்சி இராகம்: சௌராஷ்டிரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## இரண்டாம் திருமுறை தேவாரம் - திருஞானசம்பந்தர்

தலம்: திருவலஞ்சுழி பண்: நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

## மூன்றாம் திருமுறை தேவாரம் - திருஞானசம்பந்தர்
## பஞ்சாக்கிரப்பதிகம்: அஞ்செழுத்துண்மை

தலம்: சீர்காழி பண்: காந்தாரபஞ்சமம்

துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

## நான்காம் திருமுறை தேவாரம் –திருநாவுக்கரசர்
## நமச்சிவாயத் திருப்பதிகம்: அஞ்செழுத்துண்மை

பொது பண்: காந்தாரபஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐந்தாம் திருமுறை** தேவாரம் – திருநாவுக்கரசர்

தனித்திருக்குறுந்தொகை

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

## ஆறாம் திருமுறை தேவாரம் – திருநாவுக்கரசர்

திருப்புகலூர் திருத்தாண்டகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

**ஏழாம் திருமுறை** சுந்தரர்

**நமச்சிவாயத் திருப்பதிகம்: அஞ்செழுத்துண்மை**

திருப்பாண்டிக்கொடுமுடி பண்: பழம் பஞ்சுரம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே
மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன்இனிப் பிறவாத
தன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறையூரிற்
பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எட்டாம் திருமுறை : திருவாசகம் - மாணிக்கவாசகர்**

திருப்பெருந்துறையில் அருளிய

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன், அநேகன், இறைவன், அடிவாழ்க.

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்புஅறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்–கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்–தன் பூங்கழல்கள் வெல்க!
கரம்–குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரம்–குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீர்ஆர் பெருந்துறை நம்தேவன் அடிபோற்றி!

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன், அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை,
முந்தை வினைமுழுதும் ஓய, உரைப்பன்யான்

கண் நுதலான்தன் கருணைக் கண் காட்ட வந்துஎய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண்ணிறந்து, எல்லை இலாதானே! நின் பெரும் சீர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன், புகழும் ஆறு ஒன்று அறியேன்;
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல் விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பு ஆகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்த அடியார் சிந்தனை உள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயில் சிறந்த தயா ஆன தத்துவனே!
மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே, சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்னிருளே! தோன்றாப் பெருமையனே
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே! காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய் கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

### 9ம் **திருமுறை: திருவிசைப்பா** – திருமாளிகைத்தேவர்

பண்: பஞ்சமம்

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்பல்லாண்டு - சேந்தனார்**
கோயில் பண்: பஞ்சமம்

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்;
பெற்றதார் பெறுவார்உலகில்?
ஊரும் உலகுங் கழற உளறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

**பத்தாந் திருமுறை** திருமந்திரம் –திருமூலர்

சிவனோடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனோடொப் பாரிங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

**பதினொராம் திருமுறை** - பட்டினத்தடிகள் திருப்பாடல்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின்னஞ்செழுத்தை
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருளாய் கச்சி யேகம்பனே.

**பன்னிரண்டாந் திருமுறை** பெரிய புராணம் - சேக்கிழார்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புஉண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போதுஉன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்புகழ்** - அருணகிரிநாதர்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

**வாழ்த்து**–பெரிய புராண பழைய ஏட்டுப் பிரதிப்பாடல

வைய நீடுக; மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம் தழைத் தோங்குக;
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே!

திருச்சிற்றம்பலம்

## சகலகலாவல்லி மாலை

(குமரகுருபர சுவாமிகள்)

**வெள்ளை உள்ளம் பெற**

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்களன் வெள்ளை உள்ளத்
தண் தாமரைக்குத் தாகாது கொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்துஆக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே சகலகலா வல்லியே. 1

**கவிபாடும் திறன் பெற**

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்வாய் பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலா வல்லியே. 2

**செழுந்தமிழ் பெற**

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது ஆர்ந்துஉன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடுங்கொலோ உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலா வல்லியே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாக்கும் வன்மையும் பெற**

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வட நூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலா வல்லியே. 4

**இதயம் தாமரை ஆக**

பஞ்சுஅப்பு இதந்தரு செய்ய பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகலகலா வல்லியே. 5

**சகல கலைகளும் பெற**

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே. 6

**கலைத் தமிழ் பெற**

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படி நின் கடைக்கண் நல்காய் உளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே சகலகலா வல்லியே. 7

**கல்வியும் சொல் வன்மையும் பெற**

சொல்விற் பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய் நளின ஆசனஞ்சேர்
செல்விக்கு அரிது அன்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகலகலா வல்லியே. 8

**மெய்ஞ்ஞானம் பெற**

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய் புழைக்கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம் புயத்தாளே சகல கலா வல்லியே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னரையும் பணிய வைக்க**

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடிஉண்டேனும் விளம்பில்உன் போல
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலா வல்லியே. 10

திருச்சிற்றம்பலம்

## சக்தி பாடல்

(மகாகவி சுப்பிரமணிய பாரதி)

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

கணபதிராயன் – அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந்திடவே – விடுதலை
கூடி மகிழ்ந்திடவே (ஓம் சக்தி ஓம்)

சொல்லுக் கடங்காவே பராசக்தி
சூரத்தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் – பராசக்தி
வாழியென்றே துதிப்போம். (ஓம் சக்தி ஓம்)

வெற்றி வடிவேலன் – அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ! – பகையே!
துள்ளி வருகுது வேல். (ஓம் சக்தி ஓம்)

தாமரைப் பூவினிலே – சுருதியைத்
தனியிருந்துரைப்பாள்
பூமணித் தாளினையே – கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம். (ஓம் சக்தி ஓம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள் பாமாலை

## ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனகவல்லி!
காளி மகமாயி கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா!
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா!

விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே!

புவனமுழுதாளுகின்ற புவனேச்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஷ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி

கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஷ்வரி
உவமானப்பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீ ஆதரி.

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கொஞ்சிடுதல் முறையோ அம்மா.
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத்தினம் வழியனுப்பு.

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியொடு கை உனையே கூடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ணமெலாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
மன்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகளுடைய குறைகளையும் தீருமம்மா

நெற்றியுலும் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலுன் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்.

சுற்றமெல்லாம்நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா ?
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா ?

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ?
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமையன்றிக் காவலுண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தமுண்டோ?

முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ!

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்க வேண்டும்.

பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீயென்றும் வாழவேண்டும்.

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பவழ வாயழகி உன்னெழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை.

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கயிறாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்.

தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை.

-----

**மங்களம் ஜெய மங்களம்**-யோகர் சுவாமிகள்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
தொண்டர்சீர் பரவிய சேக்கிழார்க்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இராசம்மா மாணிக்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் ஓங்கும் அராலிதெற்கில் வாழ்ந்தவர் திருமதி இராசம்மா மாணிக்கம் அவர்கள். போலிங்கர் என்று அழைக்கப்படும் நாகலிங்கத்திற்கும் (மலேசிய பென்சனியர்) செல்லம்மாவிற்கும் ஏக புத்திரியாக அவதரித்தார். அன்னார் 27-08-1927 இல் மலேசியா - கோலாலம்பூரில் பிறந்தார். பெற்றோர் இவரைச் சீராட்டி வளர்த்து வந்தனர். ஆரம்பக் கல்வியை அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திலும் மேற்படிப்பபை உடுவில் பெண்கள் கல்லூரியிலும் கற்றார்.

சுப்பையா அன்னம்மா தம்பதிகளின் மகன் மாணிக்கத்தை 1946ம் ஆண்டு விவாகம் செய்து கொண்டார். இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். இவர்களுடைய இல்லற வாழ்வின் பெறுபேறாக இவர்களுக்கு ஆறு பெண் பிள்ளைகளையும், இரு ஆண்பிள்ளைகளையும் பெற்று மகிழ்ந்தனர். குடும்ப வாழ்க்கையுடன் பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டு வந்தார். திருமதி இராசம்மா அவர்கள் மாதர் சங்கத்தில் அங்கத்தவராயிருந்து பல தொண்டுகளையும் செய்தார்.

1950ம் ஆண்டு தன் தந்தையை இழந்தார். அதன்பின் தனது தாயாரையும் அரவணைத்துப் பிள்ளைபோல் பார்த்து வந்தார். கணவர் மாணிக்கம் 1977ம் ஆண்டு இறைபதம் எய்தினார். குடும்பத் தலைவனை இழந்த நிலையில் இவர் தம்மழலைச் செல்வங்களை வளர்த்தெடுப்பதில் பெருங் கஷ்டங்களை எதிர் நோக்கியிருந்த பொழுதிலும் சற்றும் மனம் தளராது தம் செல்வங்களை நற்குல மக்களாய் ஞாலத்தில் உயர நல்வழி வகுத்துக் கொடுத்தார். தன் குழந்தைகள் எண்மரையும் படிக்க வைத்து உரிய நேரத்தில் திருமணம் செய்து கொடுத்து பேரப்பிள்ளைகளையும், பூட்டப்பிள்ளைகளையும் கண்டு பெரு வாழ்வு வாழ்ந்தவர் இராசம்மா அவர்கள். பிள்ளைகளுடன் அன்பாகவும் கண்டிப்புடனும் இருந்து அவர்களுக்கு கல்வியைப் புகட்டி நல்லொழுக்கத்தையும் கற்பித்து வளர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக கனடா வந்து பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் வசித்து வந்தார். பிள்ளைகள் எல்லோரும் திருமணமான பின்னரும் அவரைச் சுற்றியே தங்கள் இருப்பிடங்களைத் தேடி வாழ்ந்து வந்தார்கள். அடிக்கடி அவரை சந்தித்து ஆதரவளித்து வந்தார்கள். எல்லோரையும் அரவணைத்து வாழ்ந்த இவர் 2015 நவம்பரில் விழுந்து நடக்க முடியாமல் இருந்தார். இதனால் நடைவண்டிலுடன் (walker) உலாவ நேரிட்டது. அதன்பின் அவரது உடலநலமும் படிப்படியாகக் குன்றத் தொடங்கியது. பின்னர் 2018 யூன் மாதம் நாடியில் ஒரு வீக்கம் ஏற்பட்டது இது புற்று நோய் என்று கண்டு பிடிக்கப்பட்டது அதனால் மிகுந்த வேதனைப்பட்டு ஆஸ்பத்திரி சென்று மூன்று கிழமை இருந்து அவரது உயிர் மண்ணை விட்டுப் பிரிந்து விட்டது.

திருமதி இராசம்மா மாணிக்கம் அவர்கள் கடவுள் பக்தி மிகுந்தவர். எந்நேரமும் திருநீறு அணிந்து காணப்படுவார். அராலி கரைப்பிட்டிப் பிள்ளையாரையும், அராலி ஆவரம்பிட்டி அம்மனையும் குலதெய்வங்களாகக் கொண்டு இறுதிவரை மனத்துணிவோடு வாழ்ந்தவர். தம் பிள்ளைகளுக்கும். மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் சைவசமய நீதிநெறிக் கதைகளைக் கூறி சைவநெறியில் நிற்க வழிகாட்டி வந்தவர். வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய ஆசார ஒழுக்கங்களைப் போதித்து வந்தார். மருமக்களையும் மக்களாகவே பேணி அன்போடு பழகி வந்தார். எல்லோருடனும் அன்பொழுகப் பேசுவார். இன்முகத்துடன் வரவேற்பார்.

திருமதி இராசம்மா மாணிக்கம் அவர்கள் அன்பு, அடக்கம், இன்சொல், ஈகை, வாய்மை, பொறுமை, பணிவு, ஒப்புரவு, விருந்தோம்பல், முயற்சி, பிறர்நலம் பாராட்டல், கடவுள் பக்தி முதலிய நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர்.

"அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு."

என்ற அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு உதாரண சைவத்தமிழ் மகளாக வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி இராசம்மா மாணிக்கம் அவர்கள் குடும்பத்தின் குலவிளக்காய், அன்பு மனைவியாய், அன்புத் தாயாய், அன்பு மாமியாய், அன்புப் பேத்தியாய், அன்புப் பீட்டியாய் நிறை வாழ்வு வாழ்ந்து தனது 91 ஆவது வயதில் சிவபதமடைந்தார்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில்
அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!

(குமரகுருபர சுவாமிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புத் தெய்வம் அம்மா

"அன்பே சிவம்"
"ஆறுவது சினம்"
அடிக்கடி சொல்லும் அமுத வாக்கு

"பச்சைக்கிளி வெள்ளைக்கிளி
பவளவாய் உடைய கிளி!
பகலிரவாய் விழிப்பிருந்து
பாலூட்டி வளர்ந்த கிளி
இச்சையுடன் வளர்த்த கிளி
என்னுடனே பேசும் கிளி
நீ எங்கு போறாய்
கொஞ்சம் நில்லு நானும்,
வாறேன் சென்று உலாவிப்
போவோம் கண்ணே."

இது அம்மா தினமும் அடிக்கடி எனக்காக நித்திரையிலும் பாடும் பாடல் எங்கிருந்து வந்ததோ இப்பாடல் நானறியேன் நித்திரைதனில் ஒரு சித்தன் உருவாய் வந்து முத்தி தருவேன் என்று, பேசினதுண்டோ, இது கனவோ, இது நனவோ நான் கண்டெல்லாம் வீணோ என்றும் கதறிக்கதறி அழுவாய் அம்மா, நித்திரையாய் கண் விழித்தும் காணாது கிளி! கிளி என அலறுவாய் அம்மா

பரமபுரத்தம்மா ஓடிவா ஓடிவா – இங்கே
சீரடி பாபா வந்தார் எங்கே? எங்கே?
வண்டிலோடு வந்தார்– எனக்கோ விளங்கவில்லை.
அங்கே புத்தகம் இருக்கு – போய்
படியுங்கள் என்றேன். அன்று எனக்குப் புரியவில்லை. இன்றுதான் "உன்னோடு நடந்தது திருவிளையாடல்தான்" என்று எண்ணிப் பூரிக்கிறேன்.

சாப்பாட்டிற்கு அடம்பிடிப்பாய். அடம்பிடித்தால் சொல்வேன், இனி ஆஸ்பத்திரிதான் என்று. எனக்குப் புரியவில்லை அப்போ கடைசி இதுதான் என்று அங்கு பயத்தினால் கைகளையும் கழுத்துச் சட்டையும் அழுங்குப் பிடி பிடிப்பாயே அம்மா!
என்கடமை இதோடு இருக்கட்டும் – இனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியார் (கந்தையா) வந்தார் – பரியாரியார் வந்தார் என பயமுறுத்தினாய். நள் இரவு 12 மணி கிளி கிளி என்ற கூக்குரல் கேட்டு ஓடிவர அராலி ஆட்கள் வந்திருக்கிறார்கள். அம்மன் கோவிலில் தான் தனித்து நிற்கமேற்கு வீதியில் ஆண்கள் கூட்டமாகப் பெரிய சத்தத்துடன் கதைத்துக் கொண்டிருக்க நான் பயந்து போய் உனைக் கூப்பிட்டதும் அவர்கள் சத்தம் மெதுவாகியது என உடம்பு படபடக்க வியர்க்க வியர்க்கக் கூறினாய் அம்மா! எனக்கொன்றும் அன்று விளங்கவில்லையே அம்மா!

அல்லும் பகலும் ஆஸ்பத்தரியில் பதினைந்து நாளாய் தலைமாட்டிலும் கால் மாட்டிலும் காலனுக்குக் காவலிருந்தேன் அம்மா! காலன், அவனோ கட்டி என்ற போர்வையில் வந்து, எனைக் கட்டி வைத்து உன் உயிரைக் கவர்தானே! கொடியபாவி! அந்த நோ மீளாத நோவம்மா!

அதிகாலை 4 மணி சிதம்பரம் சென்று சிற்சபையில் சிவநடனக் காட்சியை ஐந்து நிற ஒளியோடு அழகாகக் கண்டு களித்து வந்து கூறி எம்மையும் அங்கு செல்ல வைத்து களிப்புற வைத்தீர் அம்மா! அடுத்த இரு தினத்தில் அந்த ஒளிக்குள் எம்மையும் அடக்கி நீயும் நொடிப்பொழுதில் கண்திறந்து எம்மை அடக்கி விட்டாயம்மா! அம்மா! அம்மா! நீ தெய்வம் அம்மா நீ சாகவில்லை. யாரும் இல்லையே என்ற ஏக்கமும் எனக்கில்லை. என்னுடனே இருக்கின்றாய் அம்மா! அந்த வல்லமையும் தந்து விட்டாய் பயப்படாதே! பணியாதே! மௌனம், துணிந்து நில், எனக்கு நீ சொன்ன வாக்குக்கள். வலது சிறகு ஒடிந்த பறவையானேன்! இன்று இடது சிறகும் ஒடிந்து விட்டது அம்மா! இப்போ நீ கிளி கிளி, என கழிவறையில் கூவி அழைப்பதும் என் காதில் ஒலிக்கிறதே. எழுதுகிறேன் அம்மா முடித்து வருகிறேன். கொஞ்சம் பொறு தாயே! வல்லமை தாராயோ எனக்கு நீ அம்மா உனை இழந்து தவிக்கின்றேன்! என் தெய்வமே (தாயே! அம்மா!) இல்லை தணிகின்றேன் அம்மா உன் கூக்குரல் கேட்டு நான். அம்மா நீ விபூதியால் விநாயகரைப் பூசிக்க விண்ணுலகம் போனீரோ

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புஷ்பராணி மாணிக்கம் (கிளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

ஏறக்குறைய 35 வருடங்களுக்கு முன் எமக்கு தாயும் தந்தையுமாய் இருந்த உங்களின் உயிரைக் கால தேவனிடமிருந்து காப்பாற்றப் போராடி வெற்றி கண்டோம்.

தாய் நாட்டை பிரிந்து வந்து நீங்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தீர்கள். ஐயா காணக் கொடுத்து வைக்காத அனைத்தையும் நீங்கள் நேரில் பார்த்து அநுபவித்து அகமகிழ்ந்தீர்கள்.

கண் திருட்டி போலும் மீண்டும் ஒரு தடவை காலன் தன் பங்கிற்கு திட்டமிட்டு வெற்றியும் பெற்றான். ஆஸ்பத்திரி போக மாட்டேன் என்று அடம் பிடித்த போதும் உங்களை வதைத்த நோவைத் தீர்க்க வேறு வழி எமக்குத் தெரியவில்லை.

நீங்கள் விரும்பியபடி பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் உட்பட அனைவரும் புடை சூழ வீட்டைவிட்டுப் புறப்படும்போது அது உங்கள் கடைசி யாத்திரை என்று எவரும் நினைக்கவில்லை.

அம்மா நீங்கள் என்னிடம் "ராணி என்னை வீட்டிற்குக் கூட்டிப் போம்மா" என்று கெஞ்சிக் கேட்டது இன்றும் என் காதில் கேட்கிறது. நிறைவேற்ற முடியாத பாவி. நான் அழுகிறேன் இன்னும். தாயே என்னை மன்னித்துவிடம்மா வேறு வழி ஒன்றுமே இருக்கவில்லை. இம்முறை நாம் தோற்று விட்டோம்.

ஆனால் ஒன்றுமட்டும் முடிந்தது. உங்களை நோவினால் வருந்த விடாமல் சுகமான ஒரு தூக்கத்தில் வைத்திருக்க மருத்துவ ரீதியான உதவி தாராளமாகக் கிடைத்தது. தீர்க்க முடியாத நோய் ஆக்கிரமித்தும் உங்கள் உடம்பில் ஒரு பளுவும் இல்லாமல் முகத்தில் எந்த வேதனையும் தென்படாமல் சாந்தமாக நீண்ட துயில் கொண்டீர்கள்.

சிறு பிள்ளை போல் விரல்களை ஒன்றொன்றாக மடித்து 9 தடவை சாயி மந்திரம் உச்சரித்த உங்களை சாயிபாபா அரவணைத்துக் கொண்டது அனைவர்க்கும் ஆறுதல் தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Amma,

You are my support and
You are my strength
You always stay with me for good & bad..

I believe you are in a special place in our heart
and Pouring unconditional love and blessings forever

Mày you find a gentle peace in sweet eternal rest

We miss you a lot
We love you so much.

OM SAI RAM

ஜெயமணி (ராணி) சிறீபவன்

**ஓம் சாய் ஸ்ரீ சாய் ஜெயஜெய சாய்!**



சாய்பாபவிற்கு முதல் முதலாக எழுதப்பட்ட
மந்திரம் இது.
ஓம் நமோ பகவதே சாயி நாதாய!
அமிர்த வாக்கிய வர்ஷாய!
சகலலோக பூஜிதாய!
சர்வ தோஷ நிவாரணாய!
ஷீரடி வாசாய!
சாயி நாதாயே நமஹ:

தினமும் 9 முறை படிக்க சகல நன்மைகளும்,
ஐஸ்வரியமும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

இதயத்துக்குள் ஏதோ குழப்பம் அம்மா இன்று எண்மரில் ஒருவனாய் ஏணியில் ஏற்றி விட்டீர் நானோ உன் காலடியில் கடமை செய்யக் காத்திருந்தேன் தாயே பசித்து வரும்போது என்முகம் பார்த்து சாதம் பரிமாறும் விந்தையைப் பார்த்து மகிழ்வேன் அம்மா! பகிடிக்கதை பேசி மகிழ வைத்தேன் உன்னை! இது தொடரும் என இறுமாப்புடன் இருந்தேன் அம்மா! இந்த வேளையில் காலமோ விளையாடியது என்னவோ.

மாம்பழம் ஆசையென்று மனதார வாங்கிவர நீ சிரித்த சிரிப்பு அம்மா கண்ணிற்குள் நிற்கிறதே அந்தச் சிரிப்புத்தான் இன்று அடங்கி விட்டதே! ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்தேன்! அம்மா நீ அமைதியாய்க் கண் கிறந்து பார்த்து எமை அடக்கிய விந்தையை என்னென்பேன் என் அம்மா! நெஞ்சு கொதிக்கிறதே! என் குரல் (அம்மா) கேட்டு கண்விழித்துக் கதை சொன்னாயே அம்மா! கொள்ளி வைக்கப் பிறந்தவன் நானென்று காத்திருந்தேன்!

பட்டுச் சேலை பள பளக்க பாடையில் மலரினுள் நீ உறங்க சுண்ணம் இடித்து, பானை உடைத்து, சுற்றி வந்து, பாதம் தொடவும் பாண்ட் வாத்தியம் படபடக்க கனடா funeral home ஐ மக்கள்–மருமக்கள்–பேரர்–பீட்டர்–உறவினர்–நண்பர்கள் சூழவர ஊர்வலமாக சுற்றி வந்தது தான் தெரியும் அம்மா எனக்கு – ஒரு நொடிப் பொழுதில் button ஐ அமத்த – உனது பஞ்சு மேனியைச் சுட்டு, நீறாய் எடுத்து நீருக்குள் கரைத்த பாவிதான் நான் அம்மா!

என்னவோ காலனின் விளையாட்டை நடத்தி முடித்தேன் உன் மோகன் நான்!

எல்லாம் கனவா நனவா நம்ப முடிவில்லை எனக்கு தாயே!. யாரெனக்கு ஆறுதல்? அம்மா என்ற உரிமையும் போச்சே அன்றோடு! எங்கிருந்தாலும் நீ என் தெய்வம் அம்மா! உன் அருள் எனக்கு வேண்டும் தாயே! என வேண்டி அம்மா அம்மா எனக் கதறும் உன் இளையமகன் மோகன் அம்மா நான்.

இளையமகன் மோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புத் தங்கத் தாயே அம்மா!

எனை தவிக்க விட்டு எங்கு சென்றீர். என் அம்மா இருக்கிறா என நினைத்தவுடன் ஓடோடி வருவேன் தாயே. யாரிடம் நான் இனிச் செல்வேன். ஐந்தாவது பிள்ளை செல்வத்துடன் வந்த பிள்ளை என்றதாலோ என்னவோ றோசா எனப் பெயரிட்டு அழைத்தீர் ஐயாவையும் தவறவிட்டுத் தனித்திருந்து போராடி எமைப் படிப்பித்து தலை நிமிர வைத்தாயே! எங்கு சென்றீர் அம்மா! நீங்கள் மறைந்த 21ம் நாள் நான் பேரதிர்ச்சிக்குள்ளானேன் அதில் தப்பி விட்டேன் அம்மா. மறக்க முடியாத சம்பவத்தை நினைத்து வருந்துகிறேன் அம்மா. ஆன்மீக சக்தி முழுவதும் உங்களுக்குள் இருந்தது எனக்குத் தெரிந்ததே. 91 வயது வரை காயத்திரி மந்திரமும் பஞ்சாட்சர மந்திரமும் காப்பாற்றி விட்டதம்மா உம்மை. அனைவரையும் கவரக்கூடியவரும் இனியவருமான என் அன்னையே உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆவரம்பிட்டி அம்மனையும் பாபாவையும் வேண்டுகிறேன்.

றோசா மகேந்திரன்

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே.

நயினை க. இராமச்சந்திரா

அம்மாவின் ஆத்மா சாந்திபெற நயினை நாகபூசணி அம்மன் பாதகமலங்களை வேண்டி நிற்கின்றோம்.

விஜி இராமதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் றஞ்சி மருமகன் சிவா ஞாபகங்கள்
# (Memories)

என் அன்புத் தெய்வமே என் அம்மா உன் பொற்கரங்களால் எங்களைச் சீராட்டி வளர்த்தாய் 1977ம் ஆண்டு எங்கள் தந்தையை இழந்தோம். அன்று தலை நிமிர்ந்தாய் அம்மா. எங்களையும் நிமிர வைத்தாய். படியுங்கோ, சொந்தக் காலிலே நிற்க வேண்டும் யாருக்கும் அடிமைப்படக்கூடாது என்று அன்று பாடம் புகட்டினாய். அதன்படி நடந்தோம். இன்றும் நடக்கிறோம். அவ்வாறே பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு படி முன்னேற்றத்திலும் தட்டிக் கொடுத்து, ஊன்று கோலாய் நின்றாய் அம்மா. விரும்பியபடியே பிள்ளைகளும் பட்டப் படிப்பு முடித்தார்கள் அன்று சான்றிதழையும் பார்த்து ஆனந்தச் சிரிப்பு சிரித்தாய் அம்மா. இன்று என் கண்முன் வருகிறது.

மருமகனையும் தன் பிள்ளை என்று சொல்லிக் கட்டளை போடுவீர்கள். சிவா இன்று வங்கி, கடை போக வேணும், போகத்தான் வேணும். கடைசிவரை இறுமாப்போடும் கௌரவத்தோடும் இறுதிவரை வாழ்ந்தாய் என் தாயே. இன்று உங்கள் பிரிவால் வாடினாலும் உங்களின் ஞாபகங்கள் மனச் சந்தோஷத்தைத்தான் கொடுக்கிறது. கடைசிப் பார்வை பல அர்த்தங்களைப் புரிய வைத்தது. உங்கள் ஆத்மா நல்ல நிலையில் சாந்தி பெற அராலி முத்துமாரி அம்மனை இருகரம் கூப்பி வேண்டுகின்றோம். என் தெய்வமே, என் அம்மா அன்பே சிவம், ஆறுவது சினம் நீங்கள் ஒவ்வொருநாளும் சொல்லும் வசனங்கள். என்றும் ஞாபகங்களில் உதிக்கும். பிரிவால் வாடும்

மகள் றஞ்சி மருமகன் சிவா,
பிள்ளைகள் சுஜே, சஜன்

**அபிராமி அந்தாதி-அபிராமிப்பட்டர்**

தனம்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும், நல்லன எல்லாம்தரும், அன்பர் என்பவர்க்கே
கனம்தரும், பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு அம்மாவே

பாசமழை பொழிந்து என்னை வளர்த்தெடுத்த தாயே. அம்மா அம்மா! மோசம் செய்து நீ மறைந்த மாயம் என்னவோ நானறியேன். நினைக்க நினைக்க இதயம் வெடிக்கிறதே அம்மா, சுசி எங்கே, சுசி எங்கே என்று தேடுவாயே சுட்டுத்தா சுட்டுத்தா (Pank cake) என்று என் அருகில் நிற்பாயே! என் வருகை பார்த்திருந்து விரல்களை நீட்டுவாயே நகம் வெட்ட, இனி எப்போது வெட்டுவேன் உன் விரல் நகத்தை நான் அம்மா! பக்கத்தில் எனை இருத்தி பாடி கதை சொல்லும் விந்தையை என்னென்பேன். என் அம்மா! தாயே மெத்தை விரி என்று மிடுக்காகச் சொல்லி வித்தை காட்ட நான் கோபப்பட நீயுமோ கைகூப்பி "அன்பே சிவம்", "ஆறுவது சினம்" என்று சொல்லும் உன் அமுத வாக்கை தெய்வ வாக்காகப் போற்றுவேன் தாயே! நான் என்றும் உன் பாதம் தொட்டு வணங்க – அம்மா நீ தந்த ஆசிர்வாதம் இப்பிறப்பில் எனக்குப் போதும் தாயே. பத்மன் எங்கே? பத்மன் எங்கே? பிள்ளைகள் எங்கே? பிள்ளைகள் எங்கே? என்பாய் (எனக் கேட்பாயே ) யாரம்மா இனி கேட்பது?

எண்மரைப் பெற்று விட்டீர். பிறைபோல் வளர்த்து விட்டீர் நானோ உண்ணாமல், உறங்காமல் உனக்காக வருந்துகிறேன். தாயே. கள்ளமில்லா உன் உருவம் – எனைவிட்டு கடைசிவரை மறையாதம்மா

உன் ஆசைமுகம் காண எங்கு செல்வேன் நானும் இனி மீண்டும் பிறப்பெடுத்து எனக்கொருகால் வாராயோ அம்மா – தாயே.

"Bye" அம்மா எனும்போது வோக்கருடன் வாசல்தாண்டி "Bye" சொல்லும் காட்சியை என்று இனி காண்பேன் அம்மா. நானும் "Bye" சொல்லிவிட்டேன் – நீயுமோ சொல்லிச் சொல்லிப் பிரிந்து விட்டாய் அம்மா! அம்மா!

ஓம் சாயிராம் ஓம் சாயிராம்

உனைதேடி புலம்பும் மகள் சுசி, மருமகன் பத்மபவன்,
பிள்ளைகள் வினோத், பிரவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா அம்மா எங்கள் தாயே

"அன்பே சிவம்", "ஆறுவது சினம்"

அம்மா அம்மா எங்கள் தாயே
அருமையாக வளர்த்து அணைத்த உனது கைகள்
அணையாத ஒளியாய்ப் போனதோ
என்னத்தைக் கொண்டு வந்தேன்.
எதனையுமே எடுத்துச் செல்லேன்.
என்றதாலோ என்னவோ விரிந்து கிடக்கின்றதே
உனது கைகள்

அணையாத ஒளியாயே அணைத்து அணைத்தாயே
எண்மரை எழுந்து நிற்க நீ பட்ட கஸ்டம்
எமக்குத் தெரியாதா அம்மா, உனக்குத்தான் தெரியும் நன்றாய்
கைப்பிடித்தவனையும் இழந்தாய் – இளம் வயதில் உனைக்
கைதூக்கிவிட்ட தனையனையும் இழந்தாய் ஈராண்டில்
இன்று நாம் எம் இதயத்தை துறக்கின்றோம் அம்மா
உனக்காக அம்மா!

### ஓடம் போலவே ஆடுகின்றாயே எம் இதயக்கடலினுள்

எண்மரை நீ வளர்க்க பாடுபட்ட கஷ்டமெல்லாம்
ஏட்டினிலே அடங்காதே
இறைவன்தான் கேட்க வேண்டும். (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக்கடலினுள்)

ஏழ்மையில் வளர்ந்த எம்மை ஏணியில் ஏற்றிவிட்டு
அழியாத வரம் பெற்று அமரர் உலகம்
அடைந்தாய் தாயே
தனயரும் தவிக்கின்றார் தணியாத பாசத்தில்
(ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதய்க்கடலினுள்)
அம்மம்மா என்று பேரருமே புலம்புகின்றார்
பாட்டியம்மா என்று பூட்டருமே கலங்குகின்றார்.
அம்மா நீ எங்கு சென்றாய்
தேடுகின்றோம் உன் இடத்தை (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதய்க்கடலினுள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் என்னும் வீட்டிலிருந்து
பாமரராய் விட்டாயோ அம்மா! (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக்கடலினுள்)
எங்கள் தாயே எம் தங்கமே
எமக்கொருகால் பேசாயோ
என ஏங்கும் வேளையில் – அன்னவரை–கண்திறந்து
(கண்ணுக்குள் அடக்கிவிட்டாய் கணப்பொழுதில் நீ அம்மா
(ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக்கடலினுள்)
பாராயோ என்தன் முகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ எனக் கதறிப் புலம்பிய எம் தெய்வம்
நீயே தான் அம்மா
உனை விட்டுத் தவிக்கின்றோமே
உமை காண்பதும் எப்போதோ (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக்கடலினுள்)

மக்களுமே புலம்புகின்றார்
மருமகரும் அலறுகின்றார்
பேரருமே கதறுகின்றார்
பீட்டருமே பதறுகின்றார் – எம் தாயே
(ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக் கடலினுள்)

எப்போது காண்போமோ
தெய்வமுகம் நாமும் இனி–
விடமாட்டோம் உனை என்றும்
வீற்றிருப்பாய் எம் இதயத்தில் (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக் கடலினுள்)
எண்மரைப் பெற்றுவிட்டு,
எழுவராய் இருக்க வைத்து
ஏட்டினிலே இடம்பிடித்து,
எட்டியே போய்விட்டாயோ அம்மா? (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக் கடலினுள்)

கட்டி என்ற போர்வையிலே
காலன் உனைக் கவர்ந்துவிட்டான்
கண்கலங்க நின்று நாமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறியே கலங்குகின்றோம்
உன் காதில் கேட்கின்றதோ எங்கள் குரல் நன்றாக
(ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக் கடலினுள்)
தொண்ணூறு வயதுவரை துணிச்சலாய் துணிந்து நின்றாய்
தொண்ணீற்றோர் ஆண்டினிலே
காலன் உனைக் கண் வைத்தான்
கட்டி உருவில் வந்த காலனுக்குக் காவலானோம்
மாட்டேன் மாட்டேன் என
மடக்கிவிட்டான் கொடிய காலன் (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக் கடலினுள்)

எம்தாயே எம்தெய்வமே
ஏற்றி உனைப் போற்றியே
எம்மிதயத்தைத் தருகின்றோம் பாசத்தின் பரிசாக,
ஏற்றுக் கொண்டே சென்றிடுவீர்
இறைவனோடு இறைவனாக
வணங்குகின்றோம் எழுவருமே
மலர்ந்த மனத்தோடு (ஓடம் போலவே
ஆடுகின்றாயே எம் இதயக் கடலினுள்)

மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள, பீட்டப்பிள்ளைகள்

## பாசமிகு அம்மம்மா

பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் உறைவிடமே
குணத்தின் குன்றே! பொறுமையின் சிகரமே!
உமைவிட்டுப் பிரிந்து விட்டேன்
உமக்காக வருந்துகின்றேன் அம்மம்மா!

எட்டு வயதினில் வந்த எம்மை, ஏறும் வரை ஏற்றிவிட்டீர் தாயானாய், தந்தையானாய், பேத்தியானாய், ஆலோசகரானாய்! கொடையாளியானாய்! எமைத் தூக்கிவிட்ட எம் தெய்வம் நீங்கள்தான் அம்மம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் எழுத முடியவில்லை பத்திரிகையும் limit ஆனால் உன் பாசத்திற்கு limit இல்லை அம்மம்மா! பூட்டன் போன் எடுக்க, "வந்து பாருங்கள். நானும் சொற்பகாலம்" என்று எமையும் அழைத்தது இதற்குத் தானா? எனக்கோ விளங்கவில்லை. பூட்டரும் வந்தனர். அவருடன் நீரும் களித்து மகிழ்ந்தீர்.

ஆவணி 27 உமக்கு 91 நீங்களோ 26 ஆஸ்பத்திரியில் வலியினால் துடிக்கிறீர் என உணர்ந்தேன். சரி விட்டுவிட்டேன் கதையை. ஆ! செப்ரெம்பர் 9 காலை துயரச் செய்தி கேட்டு துடித்துப் போனேன். இருக்க முடியவில்லை. ஏறினேன் பறவைக்கப்பல், குழந்தைகளையும் விட்டு அம்மம்மா! வந்தேன் உம் இறுதி நித்திரையில் நுழைய முடியவில்லை, அம்மம்மா நீங்கள் அழகான பெட்டியில்

பட்டுச் சீலை பளபளக்க, படுத்திருந்தீர் மலரணையில், நெற்றியிலே பொட்டு, கழுத்தில் பூமாலை, கிளியோபட்டர் துயில்வதுபோல். மலரணையில் மலர்வளையம் சூழ்ந்திருக்கு துயின்றீர் தட்டிப்பார்த்தேன் – எழுப்ப முடியவில்லை! "அம்மம்மா அம்மம்மா" என அலறினேன்! அடித்தனர் மேளம்! அலறினேன் பதைபதைத்து! உன்கடமை செய்தனர்! காத்திருந்தேன் என்ன நடந்ததென எனக்கே தெரியவில்லை.

பேரர்கள் உமை சுமக்க பூட்டர்கள் மலர்வளையம் கொண்டுவர பாண்ட் வாத்தியம் இசைக்க மக்கள் மருமக்கள் இனத்தவர் நண்பர்கள் தொடர்ந்து வர சுற்றி வந்தாய் உல்லாசமாய் ஒரு சுற்றுச் சுற்றி, சுற்றி வந்ததுதான் கண்மூடித் திறப்பதற்குள் நீறானாய் ஒரு நொடியில் பறந்து வந்த நானும் பார்த்துப் பதைபதைத்து பறந்தேன் மறுதினமே.

உங்கள் பயணம் இதுதான் அம்மம்மா நாமும் அந்தளவோடுதான். அதற்கும் அப்பால் வரமுடியாதே!!! அம்மம்மா.

ஜெனா நந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ammamma

Ammamma you have been amazing role model and our great blessing. You were the strongest, most kind hearted soul I have ever Known... It breaks my heart to even think that have left us but your memories. Your words of wisdom and your Laws of Kindness will always be treasured in my heart forever.

You have always been my greatest strength, and inspiration, guided me through life and always encouraged me to do better and be independent. You taught me the importance of family, you have sacrificed so much for your family, you have protected us and always wanted the best for us.

Our lives will not be the same without you but I know we all have your blessing and I hope you will give us the strength and guidance to move on.

I miss you dearly Ammamma until meet again. May your beautiful soul rest in peace.

Jenna Nanthan

## Dear Ammamma

Thank you for always being calm. even when I made you upset. Thak you for making me hot lunch meals. when I came home from school. Thank you for giving me $20, even I asked for $10. Thank you for asking me what I would want to do, when others always told me what to do.

Thank you Thank you Thank you Ammamma

Jeyanthan Mahendiran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear Great Grandma

I am glad I got to meet you. Thank you for your presents and hugs. We. miss you

Sulie Jeyanthan

## Dear Ammamma

Thank you Ammamma for everything.
You have given me strength and be strong.
You have always been part of me
You have been a great ammamma and a great hearted soul.

Jeyanthy Anantharuban

## Poodi Amma

Thank you Poodi Amma for your love and care. You have always given us money with love. We miss your hugs and Kisses. We love you.

From Abiesha and Ajay Anantharuban

## Dear Poodi Amma

I miss you so much. Thank you so much for all your love and care. You give the best hugs and you have beautiful smile. You always make me fee; Important. I wish I could take wetjet and come see you again. We love you Poodi Amma. Rest in peace.

love Jaminthar Nanthan

## Dear Poodi Amma

We love you. We miss you

Meera & Maya Nanthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ammamma

It didn't take much to make her happy - a phone call, a card a visit, or kiss before saying Good Night. She lived to make our lives better and was proud of us.

Vinoth Pathmabavan

## Ammamma

Our parents give life Our grandparents give us sense of who we are and where we came from.

Ammamma always shared everything with the biggest smile. Her biggest worries were if I ate and If I studied well.

All she did was care. thank you Ammamma for making each and every family member a better.

Piravin Pathmabavan

## Ammamma

Ammamma, I can't believe it's already been one month since you're left us. your memories continue to swirl through my mind all the time. I know you're in a better place now watching over us, laughing at all the dumb things we do. we all love you and miss you terribly. Your loss is something that tears at all of our hearts but we know that you're at peace. You're the rock of our family and you always will be. Love you! That's my blurb.

Sujevan Sivayogarajah.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ammamma

Ammamma will always be remembered as the selfless. Positive person that she was. She always put others before herself in sickness and in health. What I will miss most about ammamma is being able to visit her. I am going to miss her smile, miss her laugh. No matter how stressed I am, She always put a smile on her face and made me laugh from the stories she told and the jokes she made. Even though I can't speak Tamil and Ammamma can't speak English listening to her stories made me happy. She motivated me, inspired me, and pushed me to always keep working hard.

We all love you Ammamma. You will never be forgotten from passing your story along to friends and family.

You will always live forever in our hearts.

Sajanth Sivayogarajah.

## My Grandma

Hi my name is Abeirami Ramathas and I am Rasammah's youngest grand daughter. My grandma was like my second mom. For 18 years she has been taking care of me. All the times I went to my grandma's house a memory was made. All the memories I spent with her now in a huge book with 18 chapters to it. all her wise words and her Jokes will always be with me. She was a very caring and a very generous person she was really on of a kind. Starting from the begining summer I had the opportunity to be by her side. From sleeping on her couch to taking her to the hospital when she was ill. Through all these years me & my Grandma had a special connection. She will always be here with me and her advices will always stick with me. Her last words to me was to study good and become into a doctor. I will definitely make her wise words come true. She would always be remembered to me as an individual would always be smiling through anything.

Abeirami Ramathas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ammamma

Ammamma was a wonderful person and a loving and caring Person. She was always there to support me with her wise words, love and support. She came to canada to live a happily and peaceful life. She enjoyed all the moment with me, feeding me as a child till my grown-up days. She always had a smile on her face even if she was stress out with other problems that she was facing. I have many words to say about ammamma. that I feel that it is important to me she would give me many supportive thought and never negative even if I do something wrong . She will always correct to make me learn from my mistake and I would like to thank you ammamma. for what you have done for me and I will always cherish the memories that we spent together with all the love and caring.

Due battle of cancer you still care about me every time I went to the hospital you would say "Did you eat?" and I would response 'Yes' ammamma I did while ammamma caring about all the grandkids including me. She did not really care about herself. And she was always supportive with the pain that she was going through. It seems so quick to see you are gone away from us even you used to sit on that bid red cough with your walker I could still picture you sitting there till this day. I would love to say thank you and I love you Ammamma fpr wht you have done for me and you will all be in my heart and always will cherish your love and eise words to me I have a short Poem that I would love to you Ammamma.
Ammamma your life was full of

Loving deeds forever thoughtful of
our special needs. today tomorrow
my whole life through I will always
love and cherish you Ammamma.

By Vasigan Ramathas (Vaisi)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்களுடைய அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாக வாழ்ந்து, மறைந்த எமது தாயார் திருமதி இராசம்மா மாணிக்கம் அவர்களின் இறுதிக் கிரியையில் பங்கு கொண்டு மலர்வளையங்கள் அனுப்பி வைத்த உறவினர்-நண்பர்கள் அனைவருக்கும்-மேலும் 30 வருடங்களுக்கு மேலாக அவரின் உடல் நிலையை அவ்வப்போது கவனித்துத் தக்க நேரத்தில் தகுந்த வைத்தியம் செய்ததன்றி இறுதி மூச்சு வரை உரிய நேரத்தில் முக்கியமாக (home care) சேவையை ஏற்பாடு செய்துவித்துத் தந்த Dr. Santhakumar அவர்கட்கும் (City Centre Clinic) ஊழியர்களுக்கும். மருந்துகள் தேவையான போது அனுப்பி வைத்த City Centre Pharmacy ஊழியர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் Brampton Peel Region Home care Programme-Co-ordinator-Beata-Spectram Supervisor Jenet -PSW அங்கத்தவர்களுக்கும் எம் தாயாரின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அவரின் இறுதிக் கிரியைகளைச் சிறப்பாகச் செய்து தந்த வேதியர்களுக்கும் பாடகர்-தாள வாத்தியக் குழுவினர் அனைவருக்கும் எம் சிறப்பு நன்றிகள். மற்றும் தேவையான உதவிகள் செய்து உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

Our family would like to express and extended thank you to Doctors for Caring for our beloved mother.

Specialists: Dr. Gupta - Dr. Brade and team at Credit Valley Hospital.

Specialists: Dr. Gantous - Dr.Ko-Dr. Witterick and team at St. Joseph Health Centre/Mt,Sinai Hospital.


Special thanks. to :

Vilson Sivatharman.B.Eng(Funeral Director at Chapel Ridge Funeral Home and Cremation Center

மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின்
## கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய், அதை
வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அதுவே வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அராலி ஆவரம்பிட்டி அம்மன் கோபுரம் (நாவலடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org